# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 28.01.2011 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய ஒரு ஹதீஸே குத்ஸி உள்ளது. அதில் அல்லாஹ் கூறுகின்றான்:

**நான் உம்மை படைக்கவில்லையென்றால் இந்த உலகத்தைப் படைத்திருக்க மாட்டேன்; இந்த வானத்தையும், பூமியையும் படைத்திருக்க மாட்டேன்.**

முஸ்லிம்களின் பெரும்பான்மையினர் இந்த ஹதீஸின் நம்பகத்தன்மை மீது ஆட்சேபனை செய்கின்றனர். ஆனால் இக்காலத்தின் இமாம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் இந்த ஹதீஸின் நம்பகத்தன்மை குறித்த ஞானத்தை நமக்கு தந்துள்ளார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உயர்ந்த அந்தஸ்து இந்த ஹதீஸில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அன்னார் அனைத்து நபிமார்களிலும் சிறந்தவர் ஆவார்கள். அன்னார் கியாமத் வரை எல்லா காலகட்டங்களுக்காகவும் நபியாகத் தோன்றியுள்ளார்கள். அன்னாரைப் பின்பற்றுவதன் மூலமே மனிதன் இறைநேசத்தைப் பெறுகின்றான். இப்படிப்பட்ட அந்தஸ்தை அல்லாஹ் அன்னாருக்கு வழங்கியுள்ளான். அன்னாருக்கு எப்படிப்பட்ட நபித்துவ முத்திரை வழங்கப்பட்டுள்ளது என்றால், அது கடந்தகால அனைத்து நபிமார்கள் மீதும் பதிக்கப்பட்டு அவர்களின் நபித்துவத்தை உண்மைப்படுத்துகின்றது. அன்னாருக்கு காத்தமுன்னபிய்யீன் (நபிமார்களில் சிறந்தவர்) என்ற எப்படிப்பட்ட அந்தஸ்து கிடைத்துள்ளதென்றால் அவருடைய உம்மத்தைச் சார்ந்தவருக்குக் கூட நபித்துவம் என்ற அந்தஸ்து கிடைத்துள்ளது. ரஸூல் (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சார்ந்தவராகவும், உண்மைப் பேரன்பராகவும் திகழ்ந்ததனால் தோன்றவிருந்த மஸீஹ் மற்றும் மஹ்திக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப நபித்துவ அந்தஸ்து கிடைத்தது. அன்னார் பெற்றிருந்த இறைநெருக்கத்தைப் பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

**இது இறை நெருக்கத்திற்கான எல்லையாகும்.**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறப்பு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அன்னார் மேலே சென்று மனித இனத்தின் பக்கம் இறங்கினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சிறப்புகள் மிக உன்னதமான சிறப்புகள் ஆகும். அதற்கு நிகர் எதுவுமில்லை. மேலும் இந்த இறைநெருக்கத்தில் அன்னாருடைய இரண்டு அந்தஸ்துகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஒன்று, உயரத்தை நோக்கிச் செல்லுதல், இரண்டாவது இறங்குதல் ஆகும். அன்னார் அல்லாஹ்வின் அன்பு, உண்மை மற்றும் விசுவாசத்தில் எந்த அளவுக்கு ஈர்க்கப்பட்டார்கள் என்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அந்த (இறைவனின்) தூய இருப்பில் ஒன்றாக கலக்கும் அளவுக்கு இறை நெருக்கத்திற்கான அந்தஸ்து வழங்கப்பட்டது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ்வின் அருட்களிலிருந்தும், பரக்கத்துகளிலிருந்தும் அன்னார் பங்கு பெற்று மனித இனத்தின் மீது கருணையாக இறங்கினார்கள். இந்த ரஹ்மத்தைப் பற்றி தான் **மா அர்ஸல்னாக்க இல்லா ரஹ்மத்துல் லில் ஆலமீன்** – நாம் உம்மை அகில உலகங்களுக்கும் அருட்கொடையாக அனுப்பியுள்ளோம் என்று கூறுகின்றான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய காஸிம் என்ற பெயரின் இரகசியமும் இதுதான்.

அதாவது ரஸுல் (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து பெற்று அதனை படைப்பினங்களுக்கு வழங்குகின்றார்கள். எனவே படைப்பினங்களுக்கு கிடைக்கப்பெறுவதற்காகவே அன்னாரின் வருகை நிகழ்ந்துள்ளது. **தனாஃவத்தல்லா** என்ற வசனத்தில் இவ்வகையான உயரே செல்லுதல் மற்றும் இறங்குதல் பற்றிதான் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும் இது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உயர்ந்த அந்தஸ்திற்கான சான்றாகும்.

எனவே அன்னாரின் இறங்குதல் (வருகையின்) மூலமாக புதிய பூமி மற்றும் புதிய வானம் தோன்றியது. அதில் அன்னார் அல்லாஹ்வின் உச்சகட்ட நெருக்கத்தைப் பெற்று அதன் மூலமாக மனிதர்களுக்குரிய இரட்சிப்பு மற்றும் இறைவன் மீதான நேசம் மற்றும் அல்லாஹ்விடத்தில் ஷிஃபாத் செய்வதற்கான அந்தஸ்தையும் பெற்றுக் கொண்டார்கள். மேலும் அல்லாஹ் அன்னாருக்கு ரஹ்மத்துல் லில் ஆலமீன் – அகில உலகங்களுக்கும் அருட்கொடை என்ற அந்தஸ்தையும் வழங்கினான். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீதான நேசத்தை தனது நேசமாக அல்லாஹ் ஆக்கி விட்டான். ஆக, இறைவன் இந்த எல்லா விஷயங்களையும் அன்னார் மீதான சிறப்பான அன்பின் காரணமாகவே செய்துள்ளான். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்காக இந்த வானங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் இவ்விஷயங்கள் நிரூபணம் செய்கின்றன. எனவே, அன்னாரின் உயரிய அந்தஸ்திற்காக இந்த ஹதீஸே குத்ஸியை சரியானதாக ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கு எந்த காரணமும் இருக்க முடியாது. நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்து, அதன் மூலமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த அந்தஸ்தை நாம் கண்டு கொண்டது நமது நற்பாக்கியமாகும்.

**இந்த ஹதீஸை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

**நான் உம்மை படைக்கவில்லையென்றால் இந்த உலகத்தைப் படைத்திருக்க மாட்டேன்; இந்த வானத்தையும், பூமியையும் படைத்திருக்க மாட்டேன்.**

இந்த ஹதீஸில் என்ன பிரச்சனை உள்ளது. திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்.

**கலக்னாகும் மா ஃபில் அர்ழி ஜமீஆ – பூமியில் உள்ளவையெல்லாம் மனிதனுக்காகவே படைக்கப்பட்டுள்ளது.**

இவ்வாறிருக்கும் போது சிறப்பான அடியாருக்காக வானம் படைக்கப்பட்டிருக்க முடியாதா? பூமியில் உள்ளவையெல்லாம் சாதாரண மனிதர்களுக்கு உரியதாக முடியும் என்றால் அல்லாஹ் தனது சிறப்பான அடியாருக்காக வானத்தையும் படைக்க முடியும்!

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உண்மையில் ஆதமை கலீஃபாவாக ஆக்கியதில் உள்ள ஞானம் என்னவென்றால், அவர் இறைதிருப்திக்கேற்ற தமது விருப்பத்திற்குரிய பணிகளை படைப்பினங்களிடமிருந்து வாங்க வேண்டும் என்பதுதான். மேலும் எவற்றின் மீது அவரின் ஆதிக்கமில்லையோ அவை இறைகட்டளைக்கிணங்க அவருக்கு தொண்டாற்றுவதில் சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் போன்றவை அவருக்கு அடிபணிந்துள்ளன.

அல்லாஹ்வின் கட்டளையின்படி இவை அனைத்தும் மிக அதிகமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்காக பணியாற்றுகின்றன. கடந்த காலத்திலும் பணியாற்றி வந்தன; தற்போது பணியாற்றி வருகின்றன. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் சந்திரன் இரண்டாகப் பிளத்தல் என்ற அற்புதம் நிகழ்ந்தது. அதனை உலகமும் கண்டது. அதன் விளக்கத்தை நான் தற்போது எடுத்து வைக்கப் போவதில்லை. ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்விஷயத்தை அற்புதம் என்று கூறி அதனை

நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். மேலும் ஓரிடத்தில் கிரகணம் போன்ற நிலை ஏற்பட்டிருக்கலாம் என்றும் கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இன்ன மாதத்தில், இன்ன நாளில் சூரியன் மற்றும் சந்திரனுக்கு கிரகணம் ஏற்படும் என்று தமது மஹ்திக்காக முன்னறிவிப்பு செய்தார்கள். இதுவும் கூட வானம் மற்றும் அண்டங்களின் பொருள்களை அன்னாரின் கீழ் கொண்டு வரும் விஷயங்கள் ஆகும். எந்தக் காலத்தில் இந்த கிரகணங்கள் ஏற்பட்டனவோ அந்தக் காலத்துப் பத்திரிகைகள் நிச்சயமாக இந்த கிரகணங்கள் ஏற்பட்டன என்பதற்கு ஆதாரமாகத் திகழ்கின்றன.

எவ்வாறிருப்பினும் என்னுடைய இந்த முன்னுரை அல்லது சொற்பொழிவின் நோக்கம் அன்னாருடைய உயரிய அந்தஸ்தை எடுத்துரைப்பது ஆகும். இதனை தவிர அன்னாருடைய எண்ணற்ற அற்புதங்கள் உள்ளன. மேலும் அன்னாருடைய அந்தஸ்து மற்றும் அல்லாஹ் அன்னாருடன் நடந்து கொண்ட சிறப்பான நடைமுறைகள் பற்றி நமக்குத் தெரிவிக்கும் அறிவிப்புகளும் உள்ளன. இதுபோன்ற உதாரணங்கள் இதற்குமுன் ஒருபோதும் கிடைக்க முடியாது. ஆனால் இந்த அனைத்து விஷயங்களுக்குப் பிறகும் அன்னாரிடம் நிராகரிப்பவர்கள், **நீர் எங்களுக்கு முன் வானத்திற்கு ஏறிச் சென்று நாங்கள் படிக்கத்தக்க ஒரு புத்தகம் ஒன்றைக் கொண்டு வாருங்கள்** என்று கூறிய போது அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கூறினான்.

**நீர் கூறுவீராக! என் இறைவன் இவ்விஷயங்களிலிருந்து தூயவன். நானோ ஒரு மனிதனாகிய தூதரேயன்றி வேறு அல்லன் (17:94)**

எனவே, அன்னாருடைய அந்தஸ்து எல்லா மனிதர்களையும் விட மேலானதாகும். ஏனென்றால் அன்னார் முழுமையான மனிதராவார்கள். ஆனால் அன்னார் மனிதத் தூதராகத் திகழ்ந்தார்கள் என்பதைப் பொருத்தவரை மற்ற நபிமார்களுடன் எவ்வாறு நடந்து கொள்ளப்பட்டதோ அதேபோன்று அல்லாஹ் அன்னாருடனும் நடந்து கொண்டான். அதாவது எவ்வாறு மற்ற நபிமார்களை அவர்களின் சமுதாயங்கள் எதிர்த்தது போன்று அன்னாரையும் மக்கள் எதிர்த்தனர். மேலும் அன்னார் எல்லா காலத்திற்கும் எல்லா சமுதாயங்களுக்கும் நபியாகத் தோன்றியுள்ளார்கள். எனவே அன்னாரின் வாழ்க்கையிலும், இப்போதும் எதிர்ப்புகள் இருந்து வருகின்றன. இனியும் எதிர்ப்புகள் செய்யப்பட்டு வரும். எவ்வாறு மற்ற நபிமார்கள் ஏளனப்படுத்தப்பட்டனரோ அதேபோன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களையும் மக்கள் ஏளனம் செய்தனர். தற்போதும் ஏளனம் செய்யப்படுகின்றது. ஆனால் நல்லியல்பு கொண்ட மக்கள் இதற்கு முன்பும் நபிமார்களை ஏற்றுக் கொண்டனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்திலும் அன்னாரை ஏற்றுக் கொண்டனர். இன்னும் கூறப்போனால் அதிகமான நபர்கள் ஏற்றுக் கொண்டனர். அன்னாருடைய வாழ்க்கையிலேயே அரபு நாட்டை விட்டு வெளியிலும் இஸ்லாம் பரவியது. அதன் பின்னர் அரபு நாட்டைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், முழு உலகத்திலும் இஸ்லாம் பரவிய காட்சிகளை உலகம் கண்டு கொண்டது. இன்றுவரை பரவிக் கொண்டே வருகின்றது. இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் உலகத்தின் பெரும்பான்மை வந்து விடக்கூடிய காலமும் வரும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் அல்லாஹ் தப்லீக் பணியை ஒப்படைத்தான்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

உன்னுடைய இறைவனிடமிருந்து வேதத்தின் வடிவில் இறங்கியுள்ள விஷயங்களை மக்கள் வரை சென்றடையச் செய்வீராக!

எனவே, அன்னார் அழகிய முறையிலும், அன்பு மற்றும் கருணையுடனும், பொறுமையுடனும் துஆ செய்தவாறு அந்த தூதுச் செய்தியை எட்ட வைத்தார்கள். இஸ்லாம் வாளினால் பரவியது என்று மற்றவர்கள் பழி சுமத்துவது ஒருபக்கமிருக்கட்டும். ஆனால் சில முஸ்லிம் உலமாக்கள் கூட இஸ்லாம், போர்களின்

வாயிலாக பரவியது என்ற கருத்தைக் கொண்டவர்களாக உள்ளனர். ஆனால் நாம் பார்ப்பதாக இருந்தால் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனா வந்த பின்னர் அதன் அடுத்த வருடம் பத்ர் போர் நடைபெற்றது. அதிலிருந்து ஹுதைபிய்யா உடன்படிக்கை வரை பல போர்கள் நடைபெற்றன. அதில் அதிகபட்சமாக அகழ்ப் போரில் 3,000 முஸ்லிம்கள் வரை கலந்து கொண்டனர். ஹுதைபிய்யா உடன்படிக்கையின் போது 1,500 பேர்களைக் கொண்ட குழுதான் அன்னாருடன் மக்காவிற்குச் சென்றிருந்தது. இந்த (போர்க்) காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். ஆனால் ஹுதைபிய்யா உடன்படிக்கையிலிருந்து மக்கா வெற்றி வரை இரண்டே முக்கால் வருடங்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் மக்காவிற்கு 10,000 வீரர்களைக் கொண்ட படை சென்றது. எனவே, அமைதியான (போர் நடைபெறாத) இரண்டு வருடங்களில்தான் இஸ்லாம் வேகமாகப் பரவியதற்கான சான்றுகள் உள்ளன. அதேபோன்று அன்பு மற்றும் கருணை நிறைந்த அன்னாருடைய தப்லீக் சம்பவங்கள் பல உள்ளன. அதேபோன்று மன்னிப்பு நிறைந்த சம்பவங்கள் நிறைய உள்ளன. அதுதான் மக்களின் உள்ளங்களை வீழ்த்தியது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கருணை, மன்னித்தல் போன்ற சம்பவங்களை நான் கடந்த குத்பாக்களில் எடுத்துரைத்துள்ளேன். ஏன் அன்னார் இவ்வாறெல்லாம் செய்தார்கள்? ஏனென்றால் இதனை நீங்கள் செய்ய வேண்டும் என்று இறைவன் அன்னாருக்கு கட்டளை வழங்கினான். இவர் எனக்கு மிகவும் அன்பிற்குரியவர்; மிகவும் நெருக்கத்தைப் பெற்றவர் ஆவார் என்று அல்லாஹ் நிச்சயமாக கூறியிருந்தான். ஆனால் அவ்வாறிருந்த போதிலும் நபிமார்களுடன் எவ்வாறு நடந்து கொண்டார்களோ அவ்வாறே உம்முடனும் நடந்து கொள்ளப்படும் என்று அல்லாஹ் கூறினான். ஆனால் நீங்கள் பொறுமை, சகிப்புத்தன்மை, மன்னித்தல், நிலையான இயல்பிற்குரிய தப்லீக் பணிகளைச் செய்து கொண்டு வர வேண்டும். போர்கள் திணிக்கப்பட்டாலொழிய முடிந்த வரை கடினத்திலிருந்து விலகியிருக்க வேண்டும். ஏச்சுப் பேச்சுக்கள், அறிவீனமான பேச்சுக்கள், துன்பம் தரக்கூடிய விஷயங்களுக்கு எதிராக பொறுமையின் உயர்ந்த முன்மாதிரிகளை நீங்கள் காட்ட வேண்டும். இஸ்லாத்தின் அன்பு, அமைதியின் தூதுச் செய்தி இதன் மூலமாகவே பரவும் என்று அல்லாஹ் அன்னாரிடத்தில் கூறினான்.

திருக்குர்ஆனில் இந்த எல்லா விஷயங்களும் எவ்வாறு கூறப்பட்டுள்ளன. என்ன அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதனை நான் எடுத்துரைக்கிறேன்.

**அல்லாஹ் அதிகாரம் காஃப் -ல் கூறுகின்றான்:**

**நீர் அவர்கள் (உம்மை குறித்து) கூறுபவற்றின் மீது பொறுமை செய்வீராக! சூரியன் உதயமாவதற்கு முன்பும், மறைவதற்கு முன்பும் நீர் உமது இறைவனைப் புகழ்ந்து அவனது தூய்மையை எடுத்துரைப்பீராக (50:40)**

ஆக, எதிரிகள் செய்யும் ஏச்சுப் பேச்சுக்கள் இருக்கத்தான் செய்யும். ஆனால் நீங்கள் பொறுமையுடன் அதனை சகித்துக் கொள்ளுங்கள் என்று அல்லாஹ் அன்னாருக்கு ஆறுதல் வழங்கினான். அல்லாஹ்வும் அவனது தூதருமே வெற்றி பெறுவார்கள் என்ற முன்னறிவிப்புகளால் திருக்குர்ஆன் நிறைந்துள்ளது. இறுதியில் எவருடன் இறைவன் இருக்கின்றானோ அவரே வெற்றி பெறுவார். எனவே திருக்குர்ஆனின் போதனைகளின் மூலம் அதன் அறிவுரைகளைக் கொண்டு நீர் எச்சரிக்கை செய்து கொண்டே செல்வீராக! எவர் இறைவனுக்கு அஞ்சுவாரோ அவர் இந்த எச்சரிக்கை, அறிவுரைக்குப் பயந்து தமது இம்மை, மறுமையை சரிசெய்து கொள்பவராக ஆகி விடுவார் என்று அல்லாஹ் இவ்வார்த்தைகளால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ஆறுதல் வழங்கினான்.

அடுத்து எதிரிகளின் ஏச்சுப் பேச்சுக்களின் போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக கூறுகின்றான்:

**மன உறுதிகொண்ட தூதர்கள் பொறுமையைக் கடைபிடித்தது போன்று நீரும் பொறுமையைக் கடைபிடிப்பீராக! அவர்களைக் குறித்து நீர் அவசரப்பட வேண்டாம். அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட தண்டனையினை அவர்கள் காணும் நாளில், ஒரு பகல் பொழுதின் ஒரு சிறிது நேரமேயன்றி தாங்கள் தங்கியிருந்ததில்லை போல் அவர்கள் உணர்வார்கள். தூதுச் செய்தி எட்ட வைக்கப்பட்டு விட்டது. கட்டுப்படாத சமுதாயத்தினரே அழிவிற்குள்ளாக்கப்படுவர். (46:36)**

ஆக, அல்லாஹ் கூறுகிறான்: அன்னாரின் வருகையின் மூலமாக ஏற்படும் புதிய அமைப்பு என்பது இறைநியதியாகும். அது (புதிய அமைப்பு) தோன்றியாகி விட்டது. ஆனால் வெற்றிகளுக்கு ஒரு நேரம் இருக்கின்றது. எனவே பொறுமையுடனும், சகிப்புத்தன்மையுடனும் செயல்பட வேண்டும்.

மேலும் தூதர் (ஸல்) அவர்களே! நீங்களும் உங்களை ஏற்றுக் கொண்டவர்களும் இந்த பொறுமை, சகிப்புத்தன்மையின் மூலமாகவே செயல்பட வேண்டும். இதுதான் மன உறுதிகொண்ட நபிமார்கள் மற்றும் அவர்களை ஏற்றுக் கொண்டவர்களின் வழிமுறையாகும். இந்த கடினங்கள், துன்பங்கள் மற்றும் அதனை பொறுமை செய்து சகித்துக் கொள்வதுதான் வெற்றிகளுக்கு வழிவகுக்கின்றன. வெற்றிகள் வரும் போது எதிரிகள் பிடிக்கப்படுவார்கள். அப்போது அவன் நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்று அவன் சிந்திப்பான். எல்லாம் இந்த உலக வாழ்க்கைதான் என்று எந்த உலக வாழ்க்கையை நினைத்திருந்தானோ அது ஒரு மணி நேரத்தை விட ஒன்றுமேயில்லையே என்ற சிந்தனை அவனுக்கு வரும். எனவே எதிரிகளைப் பிடிப்பது மற்றும் நபிமார்களின் எதிரிகளைப் பொறுத்தவரை அல்லாஹ் இந்தப் பணியை தனது கையில் எடுத்துள்ளான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்காக இந்தப் பணியை மிக அதிகமாக அல்லாஹ் செய்து காட்டியுள்ளான். அன்னாரின் எதிரிகளை அல்லாஹ் எவ்வாறு சிதைத்தான் என்றால் அவர்கள் இருந்த இடம் தெரியாமல் ஆகிவிட்டனர். மக்காவின் தலைவர்கள் என அழைக்கப்பட்ட அன்னாரின் எதிரிகள் என்ன ஆனார்கள்? ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை கைது செய்ய சிப்பாய்களை அனுப்பிய அந்த அரசன் எங்கே சென்றான்? எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நபித்துவம் என்பது கியாமத் வரையிலாக இருக்கும் போது அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப அன்னாரின் எதிரிகளின் அழிவும் ஒவ்வொரு காலத்திலும் அடையாளமாக ஆகிக் கொண்டே செல்லும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் எதிரிகள் அன்னாரை எவ்வாறெல்லாம் துன்பப்படுத்தினார்கள். அன்னாருக்கு என்னென்ன பெயர்களெல்லாம் வைத்தார்கள். எவ்வாறெல்லாம் அன்னாரை இழிவுபடுத்த முயன்றனர். இது தொடர்பாக திருக்குர்ஆன் நமக்கு கூறுகின்றது.

**இந்த அறிவுரை இறக்கப் பெற்றவரே! நிச்சயமாக நீர் ஒரு பைத்தியக்காரரே (15:7)** என்று அவர்கள் கூறுகின்றனர்.

இது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் செய்யப்பட்ட ஏளனமாகும். மேலும் இது மிகவும் வெளிப்படையான தீய வார்த்தை ஆகும். மக்காவில் இந்த அதிகாரம் இறங்கியது. ஈமான் கொண்ட ஒரு சிலரைத் தவிர அங்கிருந்த பெரும்பான்மையான மக்கள் அன்னாருடன் இவ்வாறுதான் நடந்து கொண்டனர். ஆனால் அன்னார் மக்காவை வெற்றி கொண்ட போது எல்லாருடனும் அன்பு, பரிவுடன் நடந்து கொண்டார்கள். இன்னும் கூறப்போனால் நான் கடந்த குத்பாக்களில் கூறியது போன்று இந்த மக்கள் வெறும் ஏச்சுப் பேச்சுகளை மட்டும் கூறவில்லை. மாறாக இவர்கள் எல்லையற்ற அநீதியிழைத்த மக்களாக இருந்தனர். வலுக்கட்டாயமாக போரை திணித்தனர். ஆனால் அவர்கள் அனைவருடனும் அன்னார் பரிவுடன் நடந்து கொண்டார்கள். ஏனென்றால் நானே அவர்களை பழிவாங்குவேன் என்று அல்லாஹ் கூறியுள்ளான்.

**திருக்குர்ஆனில் ஃபுர்கான் என்னும் அதிகாரத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:**

**இது, இவர் இட்டுக்கட்டிய ஒரு பொய்யே என்றும், இவருக்கு மற்றொரு சமுதாயம் உதவி செய்கின்றது என்றும் நிராகரிப்போர் கூறுகின்றனர். எனவே அவர்கள் (இவ்வாறு கூறி) மாபெரும்**

**அநீதியிழைத்துப் பெரும் பொய்யும் உரைத்துள்ளனர். (25:5)**

இவ்வசனத்தில் மிகப் பரந்த கருத்துகள் கூறப்பட்டுள்ளன. எவர்கள் அன்னாரை உண்மையாளர் என்று எப்போதும் கூறி வந்தார்களோ, மேலும் எவர்கள் அன்னாரின் உண்மையாளர் மற்றும் அமானிதங்களைப் பேணுபவர் என்று கூறி வந்தார்களோ அவர்களே அன்னாரின் நபித்துவ வாதத்திற்குப் பிறகு (நவூதுபில்லாஹ்) அன்னாரைப் பொய்யர் என்று கூறினர் என்பதனை இங்கு சுட்டிக் காட்டுவதே (எனது) நோக்கமாகும்.

அடுத்து, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அநீதியாளர்கள் செய்த ஏச்சுப் பேச்சுகள் தொடர்பாக திருக்குர்ஆனில் வருகின்றது. அல்லாஹ் கூறுகின்றான்.

**நீங்கள் உணவளிக்கப்படுகின்ற ஒரு தூதரையே பின்பற்றிச் செல்கின்றீர்கள் என்று அநீதியிழைப்போர் கூறுகின்றனர். (25:10)**

**நிராகரிப்பாளர்களின் அறிவீனமான பேச்சுக்களைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான்:**

**அவர்களிலிருந்தே அவர்களிடம் எச்சரிக்கையாளர் தோன்றியுள்ளார் என்று எண்ணி அவர்கள் ஆச்சரியம் அடைகின்றார்கள். மேலும் இவர் ஒரு சூனியக்காரரும், மிகவும் பொய்யுரைப்பவரும் ஆவார் என்று நிராகரிப்பாளர்கள் கூறினர். (38:5)**

ஆக, அன்னாரை சில நேரத்தில் பொய்யர் என்றும், சில நேரத்தில் சூனியக்காரர் என்றும், பல்வேறு பெயர்களைக் கொண்டும் அந்த நிராகரிப்பாளர்கள் அழைத்து வந்தனர். அன்னாரைப் பற்றி பல (பொய்யான) விஷயங்களைக் கூறி வந்தனர். பல்வேறு வழிமுறைகளில் அன்னாரை ஏளனம் செய்து வந்தனர். ஆனால் பொறுமை, துஆ, இறைவனைப் புகழ்தல் போன்றவற்றைக் கடைபிடிக்கும் படியே அல்லாஹ் அன்னாருக்கு அறிவுரை செய்து வந்தான். மேலும் அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்கும் இதே அறிவுரையைத்தான் செய்துள்ளான்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

**மேலும், உங்களுக்கு முன் வேதம் வழங்கப்பட்டவரிடமிருந்தும், மேலும் இணை வைப்பவர்களிடமிருந்தும் துன்பம் தரக்கூடிய விஷயங்களைக் கேட்பீர்கள். நீங்கள் பொறுமை செய்து இறையச்சத்தை மேற்கொள்வீர்களாயின், அது துணிவுக்குரிய செயல்களைச் சேர்ந்ததாகும். (3:187)**

ஆக, ஒரு நம்பிக்கையாளருக்கு மேலும் தனது உயிரினும் மேலாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்ளக்கூடிய ஒருவருக்கு, தமது எஜமானரின் கண்ணியத்தில் கடுகளவு அவமரியாதை ஏற்படுகின்ற வார்த்தைகளைக் கேட்பதை விட அவருக்கு அதிகமாக வேதனை அளிக்கக்கூடிய விஷயம் வேறு என்னவாக இருக்க முடியும்? அவர் அதனை எந்நிலையிலும் பொறுத்துக் கொள்ளமாட்டார். ஆனால் அதுபோன்ற விஷயங்களை நீங்கள் செவியுற்றால் பொறுமை செய்யுங்கள் என்று அல்லாஹ் இங்கு கூறுகின்றான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எவ்வாறு எதிர்நடவடிக்கைகளை வெளிப்படுத்தினார்கள் என்று நான் கடந்த குத்பாக்களில் அன்னாரின் முன்னுதாரணத்தைக் கூறியிருந்தேன். எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காட்டிய அந்த எதிர்நடவடிக்கைகளே உண்மையான எதிர்நடவடிக்கைகள் ஆகும். ஆனால், அதற்கும் கூட இறையச்சம் நிபந்தனையாகும். இறையச்சத்தை மேற்கொண்டவாறு தமது செயல் மற்றும் துஆவின் மூலமாக அதற்கு பதில் அளிப்பதுதான் அந்த (நபி (ஸல்) அவர்களின் மீதான) நேசத்தின் உண்மையான வெளிப்பாடு ஆகும்.

நாம் இறையச்சத்தை மேற்கொண்டு, நமது எதிரிகளின் கூற்றுகளைக் கேட்டு துஆக்களின் மூலமாக, தண்டனை அளிக்கும் இறைவனின் பக்கம் குனிந்தால், அந்த எதிரிகளின் தீய முடிவையும் நாம் பார்ப்போம். ஆனால், நாம் இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் நமக்குரிய நிபந்தனையாகும். எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீதும் திருக்குர்ஆனின் மீதும் ஆட்சேபனை செய்யக் கூடியவர்களுக்கு நானே தண்டனை வழங்குவேன் என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்.

**எதிரிகளுக்கு பதிலளித்தவாறு திருக்குர்ஆனில் அல்லாஹ், அதிகாரம் அல் ஹாக்க -வில் கூறுகின்றான்:**

**நிச்சயமாக இது (திருக்குர்ஆன்) கண்ணியமிக்க ஒரு தூதரின் (மூலம் அருளப்பட்ட) கூற்றாகும். இது ஒரு கவிஞரின் கூற்றல்ல. ஆனால் நீங்கள் அறவே நம்பிக்கை கொள்வதில்லை. இது குறி சொல்பவரின் கூற்றும் அல்ல. ஆனால் நீங்கள் அறவே நம்பிக்கை கொள்வதில்லை. இது உலகங்களின் இறைவனிடமிருந்து அருளப்பட்டதாகும். (69:41-43)**

அல்லாஹ், ஏளனம் செய்கின்ற அன்னாருக்கு பல பெயர்கள் வைக்கின்ற, (நவூதுபில்லாஹ்) அன்னாரைப் பொய்யர் என்று கூறுகின்ற அனைவருக்கும் இவ்வாறு பதிலளித்து விட்டான். அன்னார் மீது பழி சுமத்தும், ஏளனம் செய்பவர்களுக்குரிய பதில் இதுதான். அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் நம்பிக்கையாளர்களுக்கு பொறுமை, துஆவிற்கான அறிவுரை செய்து விட்டு அவன் எதிரிகளை விட்டுவிடவில்லை. அன்னார் குறி சொல்லவில்லை; பொய்யரில்லை. அதேபோன்று நீங்கள் சுமத்தும் குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்று பதில் மட்டும் அல்லாஹ் கூறவில்லை. மாறாக, அல்லாஹ் கூறுகின்றான்:

**ஏளனம் செய்பவருக்கு எதிரில் உமக்கு நாமே போதுமானவன் (15:96)** என்று கூறியுள்ளான்.

இதன் அடிப்படையில் அல்லாஹ் இம்மையிலோ அல்லது மரணத்திற்குப் பிறகோ இஸ்லாத்தின் எதிரிகளுக்கு தண்டனையும் வழங்குவான்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

**கட்டுப்படாதவர்களின் தங்குமிடம் நரகமாகும். அவர்கள் அதிலிருந்து வெளிவர நாடும் போதெல்லாம் அதிலேயே அவர்கள் திருப்பப்படுவர். மேலும் எதனை நீங்கள் பொய்ப்படுத்தி வந்தீர்களோ அந்த நெருப்பின் தண்டனையைச் சுவையுங்கள் என்று கூறப்படும். அவர்கள் நேர்வழியின் பக்கம் முகம் திருப்ப வேண்டும் என்பதற்காக பெரும் தண்டனைக்கு முன்னர் நிச்சயமாக நாம் அவர்களுக்குச் சிறிய தண்டனையை சுவைக்கச் செய்வோம். தமது இறைவனின் வசனங்களின் மூலமாக நன்றாக அறிவுரை செய்யப்பட்டும், அதிலிருந்து முகம் திருப்புபவரை விட அநீதியாளர் வேறு யாராக இருக்க முடியும்? நாம் நிச்சயமாக குற்றவாளிகளைப் பழிவாங்குவோம். (32:21-23)**

எனவே அல்லாஹ் தனது அன்பிற்குரியவரை எப்போதும் கருத்தில் கொள்பவன் ஆவான். எதிரி பகைமையிலிருந்து விலகவில்லையென்றால் அவரைப் பழிவாங்காமல் விடுவதில்லை. அல்லாஹ்வின் எச்சரிக்கையிலிருந்து திருந்தவில்லையென்றால், மக்களின் சீர்திருத்தத்திற்காக அவன் வெளிப்படுத்துகின்ற சில காட்சிகளிலிருந்து அறிவுரை பெறவில்லையென்றால், பின்னர் அல்லாஹ் பழிவாங்காமல் இருப்பதில்லை; நிச்சயமாக பழிவாங்குவான். ஆனால், நானே இதனை தீர்மானிக்கின்றேன் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

**அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி கூறுகின்றான்:**

**அவர்கள் கூறுவதையெல்லாம் நீர் பொறுத்துக் கொண்டு, கண்ணியமான முறையில் அவர்களை விட்டு விலகியிருப்பீராக!**

**சுகபோகங்களைப் பெற்றுள்ள (உண்மையை ஏற்க) மறுப்பவர்களுடன் நீர் என்னை தனியாக விட்டு விட்டு அவர்களுக்குச் சிறிது காலக்கெடு வழங்குவீராக!**

**நிச்சயமாக எம்மிடம் (கடினமான) விலங்குகளும், சுடர்விட்டெரியும் நெருப்பும் உள்ளன.**

**தொண்டையை அடைக்கக்கூடிய உணவும் வேதனையளிக்கக்கூடிய தண்டனையும் உள்ளன. (73:11-14)**

எங்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் பொறுமை செய்யும்படி அறிவுரை செய்கின்றானோ அங்கு அந்த உலகவாதிகளைப் பற்றி இவ்வாறு கூறுகின்றான்.

உலகத்தின் சுகபோகங்கள் அவர்களை நிராகரிப்பவர்களாக ஆக்கி விட்டன. இந்த நிராகரிப்பிற்குரிய தண்டனை அவர்களுக்கு நிச்சயமாக கிடைக்கும். ஏனென்றால் அவர்கள் அதில் வரம்பு மீறிவிட்டனர். தண்டனையும் எப்படிப்பட்டதாக இருக்கும் என்றால் அது மற்றவர்களுக்கு படிப்பினையாக இருக்கும். ஆக அவர்களை மற்றவர்களுக்கு படிப்பினையாக ஆக்கும் விஷயத்தை தன்னிடத்திலேயே வைத்துள்ளான். மேலும் நபி மற்றும் நம்பிக்கையாளர்களுக்கு பொறுமை செய்து சண்டையிடாமல் அறிவீனமானப் பேச்சுக்களிலிருந்து விலகியிருக்கும்படி அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்.

**அல்லாஹ் தானே தண்டனை வழங்குவது தொடர்பாக அல்ஹஜ் அதிகாரத்தில் இவ்வாறு கூறுகின்றான்:**

**செவியேற்பவரே! ஒரு மிகப்பெரிய அடியாரை அவர் தொழும் போது தடுப்பவனை நீர் பார்த்தீரா?**

**எனக்குக் கூறுவீராக! அவர் நேர்வழியில் இருந்தார் என்றால், அல்லது நன்மையை ஏவினார் (என்றால், தடுப்பவனின் நிலை என்ன ஆகும்?)**

**(தடுக்கின்ற) அவன் நிராகரித்துப் புறக்கணித்தான் என்றால் (அவனது முடிவு என்னவாகும் என்பதை) நீர் எனக்கு கூறுவீராக.**

**(அவன் விரும்புவது போன்று) அன்று. மாறாக அவன் அச்செயல்களிலிருந்து விலகிக் கொள்ளவில்லையாயின், நாம் அவனுடைய முன் உச்சி முடியை - பொய்யுரைத்து பாவம் செய்யக்கூடிய முன் உச்சி முடியைப் பிடித்து வேகமாக இழுப்போம்.**

**எனவே அவன் தனது கூட்டத்தினரை அழைக்கட்டும். நாம் எமது காவலர்களை அழைப்போம். (96:12-19)**

ஆக, இதுதான் அல்லாஹ்வின் தண்டனையளிக்கின்ற விதமாகும். இன்று அந்த மகத்துவமிக்க அடியாரைப் பின்பற்றி எவர்கள் தொழுகின்றார்களோ அவர்களை தொழ விடாமல் தடுப்பவர்கள் யார் என்று சிந்திப்பது அவசியமாகும். எவர்கள் ஒருவரை தொழ விடாமல் தடுக்கின்றார்களோ அவர்களுக்கு இது மிகவும் அச்சத்திற்குரிய நிலை ஆகும்.

அடுத்து, அல்லாஹ் தனது அன்பிற்குரிய நபிக்காக இந்த வானம், பூமியைப் படைத்திருக்கும்போது அவரை ஏளனம் செய்கின்ற, நிராகரிக்கின்ற, அவருக்கு துன்பம் தரக்கூடியவர்கள் மீது சாபமிட்டவாறு கூறுகின்றான்.

**யூதர்களுள் சிலர் இறைவசனங்களை அவற்றின் இடங்களிலிருந்து மாற்றுகின்றனர். மேலும் நாங்கள் செவியுற்றோம்; நாங்கள் கீழ்ப்படியமாட்டோம் என்றும், (எங்கள் விஷயங்களை) நீர் கேளும்; (இறை வசனத்தை) நீர் கேட்காமலிரும். நீர் எங்களைக் கவனித்துக் கொள்ளும் என்றும், தங்கள் நாவுகளால் பொய்யுரைத்தவர்களாகவும், மார்க்கத்தைப் பழித்தவர்களாகவும் (அவர்கள் கூறுகின்றனர்.) நாங்கள் செவியுற்றோம்; நாங்கள் ஏற்றுக் கொண்டோம் என்றும், நீர் கேட்பீராக என்றும், எங்களை (கருணையுடன்) நோக்குவீராக என்றும் அவர்கள் கூறியிருந்தால், அது அவர்களுக்கு சிறந்ததாகவும், மிக்க நேர்மையானதாகவும் இருந்திருக்கும். ஆனால் அவர்களின் நிராகரிப்பின் காரணத்தால், அல்லாஹ் அவர்களை சபித்து விட்டான். இதனால் அவர்கள் நம்பிக்கை கொள்வதில்லை. (4:47)**

ஆக, எவர்கள் தூதருக்கு எதிராக ஏளனத்திற்குரிய வழிகளை மேற்கொள்வார்களோ அவர்கள் மீது இந்த சாபம் இறங்கும்.

அடுத்து நாங்கள் எங்களால் என்னென்ன துன்பங்களை இத்தூதருக்கு கொடுக்க முடியுமோ கொடுக்கின்றோம். சதித்திட்டங்களைத் தீட்ட முடியுமோ தீட்டுகின்றோம். இத்தூதர் உண்மையாளர் என்றால் இறைவன் ஏன் எங்களுக்கு தண்டனை வழங்குவதில்லை என்ற யூதர்களின் கூற்றைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான்.

**தாங்கள் இரகசிய ஆலோசனைகளிலிருந்து தடுக்கப்பட்டிருந்தும் தடுக்கப்பட்டதன் பக்கமே அவர்கள் மீண்டும் திரும்பி பாவம், வரம்பு மீறுதல், தூதருக்கு கீழ்ப்படியாமை ஆகியவற்றைப் பற்றி இரகசிய ஆலோசனை செய்பவர்களை நீர் பார்த்ததில்லையா? அவர்கள் உம்மிடம் வரும் போது அல்லாஹ் வாழ்த்தாததைக் கொண்டு, அவர்கள் உம்மை வாழ்த்துகின்றனர். இவ்வாறு நாம் கூறுவதனால், அல்லாஹ் ஏன் நமக்கு தண்டனை அளிப்பதில்லை என்று அவர்கள் தங்களுக்குள்ளேயே கூறுகின்றனர். நரகமே அவர்களுக்கு போதுமானதாகும். அதில் அவர்கள் நுழைவார்கள். அது மிகக் கெட்ட தங்குமிடமாகும். (58:9)**

சில ஹதீஸ்களிலிருந்து தெளிவாகின்றது. இந்த யூதர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சபையில் வரும்போதோ அல்லது சந்திக்கும் போதோ அஸ்ஸலாமு அலைக்கும் என்பதற்குப் பதிலாக, அஸ்ஸாமு அலைக்க என்று கூறி (நவூதுபில்லாஹ்) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணிக்க ஆசைப்பட்டனர். நான் கடந்த குத்பாக்களிலும் ஹதீஸ்களின் ஒளியில் கூறியுள்ளேன். சில நபித்தோழர்கள் நாங்கள் இவரை கொன்று விடட்டுமா? என்று கேட்டதற்கு அன்னார் (ஸல்) அவர்கள் இல்லை, வேண்டாம் என்று கூறினார்கள். ஏனென்றால் அவர்களுடைய அறிவீனமான விஷயங்களை இறைவன் பார்த்துக் கொள்வான். நரகத்தில் அவர்களைப் போட்டு இறைவன் வழங்கவிருக்கும் அந்த தண்டனை இந்த உலகத் தண்டனையைப் போன்றதல்ல. எனவே நான் ஏற்கனவே கூறியது போன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமானவர்கள் ஆவார்கள். கியாமத் வரை அன்னாருடைய நபித்துவத் தொடர் நிலைபெறும். அனைத்து நபிமார்களிலும் அன்னார் சிறந்தவர்கள் ஆவார்கள். எல்லா நபிமார்களைப் போன்று அன்னாருக்கு எதிரிகளின் எதிர்ப்பையும், எல்லா வகையான இழப்புகளையும் ஏற்படுத்தக் கூடிய திட்டங்களையும் சந்திக்க நேரிட்டது. அல்லாஹ் அன்னாரிடம் எல்லா சந்தர்ப்பங்களிலும் மனஉறுதிமிக்க தூதர்களைப் போன்று பொறுமை, துஆவின் மூலம் நீர் செயல்படுவீராக என்றே கூறினான். அன்னாரை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் இதே அறிவுரை தான் செய்யப்பட்டுள்ளது. இந்த மார்க்கத்தின் எதிரிகளின் ஏளனம் மற்றும் அறிவீனங்களுக்கு, நான் எவ்வாறெல்லாம் பழிவாங்குவேன் என்று அல்லாஹ்வே கூறிவிட்டான். அன்னாரை ஏற்றுக் கொண்டவர்களுக்கு இதே அறிவுரைதான் செய்யப்பட்டுள்ளது. சிலருக்கு இவ்வுலகிலேயே தண்டனை வழங்குகின்றான். சிலருக்கு மரணத்திற்குப் பிறகு நரக நெருப்பில் போட்டு

தண்டனை வழங்குகின்றான். ஆம்! எதிரிகள் போர் செய்து சமுதாயத்தின் அமைதி, நிம்மதியைச் சீர்குலைத்தால் அவனை எதிர்கொள்வதற்கு அனுமதி உள்ளது. ஏனென்றால் அவ்வாறு எதிர்கொள்வதற்கு அனுமதி வழங்கவில்லை என்றால் மார்க்கத்தின் எதிரிகள் எல்லா மார்க்கத்தைச் சார்ந்தவர்களின் அமைதியையும், சீர்குலைத்து விடுவார்கள். இவ்வுலகில் எவ்வாறு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஏளனம் செய்வதற்கு தண்டனை வழங்கினான்? என்பதற்கு பல சம்பவங்கள் உள்ளன. ஒரு தண்டனை பற்றி திருக்குர்ஆன் அறிவிக்கின்றது:

**அபூலஹபின் இரண்டு கைகளும் அழிந்து விட்டன. (111:2)**

இவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சிறிய தந்தை ஆவார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது உறவினர்களை ஒன்றுகூட்டி தப்லீக் செய்த போது இவர் மிகவும் மரியாதைக் குறைவான சொற்களைக் கூறினார். உண்மையான வாக்குறுதிகளைக் கொண்ட ஆற்றல்மிக்க ஏக இறைவன் அவரை எவ்வாறு பிடித்தான்? அது தொடர்பாக ஒரு அறிவிப்பில் வருகின்றது.

**அவரை ஒரு பயணத்தின் போது ஓநாய்கள் தாக்கி துண்டு துண்டாக்கி விட்டன.**

எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கியாமத் வரை இறைவனுக்கு மிகவும் பிரியமானவரும், சிறந்தவரும் ஆவார்கள். எனவே அன்னாருடன் செய்யப்பட்ட வாக்குறுதிகளும் எப்போதும் நிறைவேறிக் கொண்டேயிருக்கும். எல்லாக் காலத்திலும் இஸ்லாத்தின் எதிரிகள் தமது தீய முடிவை அடைந்தார்கள். இனியும் அடைந்து கொண்டே இருப்பார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்ந்த அந்தஸ்து மற்றும் அன்னார் மீதான இறைவனின் அன்பிற்குரிய காட்சிகளை எப்போதும் அல்லாஹ் நமக்குக் காட்டிக் கொண்டே செல்வானாக! மேலும் நாம் திருக்குர்ஆனின் போதனைகளின்படி உண்மையான பொருளில் நாம் செயல்படுபவர்களாகவும், எதிர்பார்ப்பிற்கேற்ப நம்பிக்கையாளர்களாகத் திகழவும் நாம் முயற்சி செய்வோமாக! (ஆமீன்.)

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 28.01.2011**

Translated by : **Maulvi ABDUR RAHMAN TAHIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**